இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பெல்பொல விபஸ்ஸி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1998, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 7.75 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பெல்பொல விபஸ்ஸி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 8 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 16/96

### பெல்பொல விபஸ்ஸி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"பெல்பொல விபஸ்ஸி மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், குறிக் கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கெனக் கொழும்பில் இதற்கு முன்னர் உருவாக் கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது, கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாத லாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பெல்பொல விபஸ்ஸி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெல்பொல விபஸ்ஸி மன்றத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பெல்பொல விபஸ்ஸி மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயரால் எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் தற்றுணிபின்படி அதை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்ற தாயிருத்தல் வேண்டும். பெல்பொல விபஸ்ஸி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2 — 10 038793 — 1,100 (96/01)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் எந்த பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்துருவாக்கப்படுகின்றதோ அப்பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளியிடப்படுகின்றது :

(அ) பௌத்த கோட்பாட்டையும், பௌத்த தத்துவ ஞானத்தையும், பௌத்த பண்பாட்டையும், பௌத்த நாகரிகத்தையும் பரப்புதல் ;

(ஆ) எல்லா உலக மக்களிடையேயும் சர்வதேச சகோதரத்துவத்தை மேம்படுத்துதல் ;

(இ) இன, மத, சமுதாய சுமுகத்தை மேம்படுத்துவதில் உதவி செய்தல் ;

(ஈ) பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், கல்லூரிகள் என்பவற்றைத் தாபித்தலும், பேணுதலும், முகாமை செய்தலும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தகுதியுடைய மாணவர்களுக்குக் கடன்கள், அறக்கொடைகள், புலமைப்பரிசில்கள் மற்றும் வேறு உதவிகள் என்பவற்றை வழங்குதலும் ;

(உ) ஆத்மீக, தத்துவஞான, பண்பாட்டு, மதக்கல்வியை ஊக்குவித்தலும், மனிதகுலத்தின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை நடாத்துவற்கு மாணவர்களுக்கும் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் பயிற்சி அளித்தலும் ;

(ஊ) பௌத்த மதத்தைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவியை வழங்குதலும் ;

(எ) யாத்திரிகர்கள் மடங்கள், சிறுவர் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள், அனாதை இல்லங்கள், மருந்தகங்கள், மருத்துவமனைகள், நோய்கண்டுபிடிப்பு நிலையங்கள், சமுதாய மண்டபங்கள் என்பவற்றை நிர்மாணித்தலும், பேணுதலும், நிர்வகித்தலும், தேவையானவர்களுக்கு எம்முறையிலேனும் மருத்துவ நிவாரணத்தையும் உதவியையும் அளித்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காகக் கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வுகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், உல்லாசப் பிரயாணங்கள், சுற்றுலாக்கள் அத்துடன் வேறு நடவடிக்கைகள் என்பவற்றை ஆயத்தஞ்செய்தலும், ஒழுங்குபடுத்தலும், நடாத்துதலும், மேம்படுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நூலகங்களையும் ஏனைய சேவைகளையும் ஏற்பாடுசெய்து பேணுதலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள், பருவவிதழ்கள், செய்தித்தாள்கள் என்பவற்றை அச்சிடுவதற்கும், வெளியிடுவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும் ஒப்பப்பணஞ் செலுத்துதலும் ;

(ஒ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் நடைபெறும் மத, தத்துவஞான அல்லது சமாதான மாநாடுகளுக்குப் பேராளர்களை அனுப்புதல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடையனவாய் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஏனைய ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தலும், உலகமக்களிடையே சமாதானத்தையும், ஐக்கியத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்காக உழைத்தலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய மற்றெல்லாக் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஆ) எவரேனுமாளிடமிருந்து அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது வேறுவகையான ஆட்கள் குழுவிடமிருந்து ஏதேனும் உதவியை, மானியக் கொடையை அல்லது கொடையைக் காசாக அல்லது பொருளாகப் பெறுதலும் அல்லது சேகரித்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் எய்தும் நோக்கத்துக்காக வெளிநாடுகளில் கூட்டுத்தாபனத்தின் கிளை ஒழுங்கமைப்புகளைத் தாபித்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பணம் கடன் பெறுதலும் அல்லது திரட்டுதலும், அவ்வாறு கடனாகப் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட பணத்தின் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஈட்டை அல்லது முறியை எழுதி நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(உ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதற்கெனக் கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலமாகவோ, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை, அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் அல்லது புரிதலும் ;

## 1998 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பெல்பொல 5 விபஸ்ஸி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய விதிகளுக்கும் இணங்க நியமிக்கப்படவேண்டிய அல்லது தேர்ந்தெடுக்கப்படவேண்டிய கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் – தலைவர், கூட்டுத்தாபனத்தின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதும் அதன் எல்லாப் பணிகளையும் கடமைகளையும் புரிவதும் அவரது சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்விதமிருப்பினும், மன்றத்தின் அமைப்பாளர் – தலைவரான வணக்கத்துக்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரோ கூட்டுத் தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப்பாளர்– தலைவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அவ்வாறு சம்மதித்தால் அவரது ஆயுட்காலத்தின்போது பதவிவகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருத்தல்.

6. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதும் சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பன மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற் குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலு விலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமுக மாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, உறுப் பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பவற்றுக்காகவும் அத்துடன் அல்லது வேறுவகையில் பொதுவாகக் கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும்,

அதன் குறிக்கோள்களை எய்துப்பெறுவதற்காகவும் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் – தலைவரின் பதவியிலான ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏற்பாடுசெய்கின்ற விதிகளுட்பட இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டம் ஒன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்த்துக்கொள்ளப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் முற்போந்த நாளன்று வலுவிலுள்ள மன்ற விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் மாற்றப்படலாம், அதற்குச் சேர்த்துக்கொள்ளப்படலாம், அவை திருத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம் அல்லது மாற்றீடு செய்யப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

8. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் – தலைவரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர் – தலைவரினதும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.